மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) வருவாய்த்துறை வாரியம், தீர்வை விதிக்கும் அதிகாரி, பண்டிகை மாதங்களில் கடைகளைப் பார்வையிடச் சென்று, வணிகர்களால் கொடுக்கப்பெற்ற கணக்குகள் நம்பத்தகாதவை என்று மெய்ப்பிக்கத் தேவையானவற்றைக் கண்டுபிடித்திருந்தாலன்றி, 1967-68-ம் ஆண்டின் பண்டிகை மாதங்களுக்காக வரி விதிப்பு அதிகாரிகள் வரி விதிப்பை மாற்றுவதற்காகத் தொடங்கி வைத்த நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென வருவாய்த் துறை (வணிக வரி) வாரியம் கட்டளை பிறப்பித்துள்ளது.

திரு என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் விற்பனை வரிக் கணக்கை அதிகமாக அரசாங்கத்திற்குக் காட்டவேண்டுமென்று அந்த உத்தியோகஸ்தர்கள் அதிகமாக வசூல் செய்திருக்கிறார்கள். எங்கள் ஊரிலேயே ஒருவர் ஐயாயிரம் மூலதனம் போட்டு ஒரே வாரம் வர்த்தகம் நடத்தினார். அதற்கு 78 ஆயிரம் ரூபாய் விற்பனை வரி ஒரு ஆண்டிக்கு கணக்கு போட்டு வசூல் செய்ய வருகிறார்கள். ஒரே வாரம்தான் வர்த்தகம் செய்தேன், ஒரு வருஷத்திற்கு கணக்கு போட்டிருக்கிறீர்களே என்று அவர் எவ்வளவோ சொல்லியும் முடியாது என்றுவிட்டார்கள். அவருடைய ஆஸ்தியே ஐயாயிரத்துக்குத்தான் இருக்கிறது. இந்த நிலைமை தமிழகம் முழுவதும் இரண்டு மூன்று மாதங்கள் அதிகமாக விற்பனை வரிக் கணக்கைக்காட்டி வசூல் செய்திருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுத்தது? தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் பதிலிலேயே கூறினேன். நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பொதுவாக தீபாவளி நேரத்தில் சில நாட்களில் வியாபாரம் செம்மையாக இருக்கிறது என்ற கணக்கை வைத்துக்கொண்டு அதற்கான சரியான தஸ்தாவேஜுகள் இல்லாமல் போட்டிருக்கிறார்கள். வரிக்குத் தேவையான ஆதாரங்கள், நம்பிக்கையான கணக்கு விவரங்கள் இல்லாமலிருந்ததால் பல இடங்களில் நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டுமென்று வருவாய்த்துறை வாரியம் கட்டளை பிறப்பித்தது என்று சொன்னேன். எங்கோ தவறுகள் ஒன்றிரண்டு நடந்திருக்கலாம். ஆனால் அந்தத் தவறுகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் சரியானது. முறையிலேயே விற்பனை வரித்துறை வேண்டுமென்றே செய்கிறார்கள் என்று மிகைப்படுத்திக் கூறும் புகார்கள் சரியானதல்ல.

Kandamanaickanur Zamin Forests

* 29 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the exodus of elephants from the Kandamanaickanur Zamin Forests of Periakulam taluk, Madurai district, to Kerala forests consequent on the denudation of the forests in the Zamin area; and

(*b*) if so, the action taken thereon?

[24th February 1969

கண்டமநாயக்கனூர் ஜமீன் பகுதி காடுகள்

திரு என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு—வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் தாலுகா கண்டமநாயக்கனூர் ஜமீன் பகுதி காடுகள் அழிக்கப்படுவதால் அங்கிருந்து யானைகள் தமிழக எல்லையை தாண்டி கேரள பகுதி காடுகளுக்கு போவது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: (அ) கண்டமநாயக்கனூர் காடுகளில் உள்ள யானைகள் மேட்டுப் பகுதிக்குச் சென்று கொண்டிருக்கின்றன. அங்கிருந்து சில யானைகள் கேரள மாநில காடுகளுக்குத் தவறுதலாகச் சென்றிருக்கக் கூடும். ஏனெனில் தமிழ்நாடு, கேரளக் காடுகள் அருகருகே அமைந்துள்ளன. மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ளவாறு காட்டு யானைகள் எவையும் அங்கிருந்து கேரள மாநிலக் காடுகளுக்குக் கூட்டமாகச் செல்லவில்லை.

(இ) பொதுவாக விலங்குகள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்வது வழக்கம். கண்டமநாயக்கனூர் காடுகளில் மேற்கொண்டும் நில ஆக்கிரமிப்புகள் செய்யப்படுவதையும் மரங்கள் வெட்டப்படுவதையும் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு முன்பு நான் கண்டமநாயக்கனூர் பகுதிக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள குன்றுகளில் 500 யானைகளைப் பார்க்க முடிந்தது. உத்தேசமாக அந்தப் பகுதியில் ஐயாயிரம் யானைகளுக்கு மேல் இருக்கும் என்று காட்டிலாகா அதிகாரிகள், ஜமீன் சொந்தக்காரர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு யானை விலை ஐயாயிரம் ரூபாய் என்றால் ஐயாயிரம் யானைகளின் மதிப்பு இரண்டரை கோடிக்கு மேல் உள்ளது. இப்போது அவையெல்லாம் கேரளா பகுதிக்கு போய்விட்டதாகக் கூறப்படுகிறது. இதைத் தடுக்க என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: கண்டமநாயக்கனூர் பகுதி அங்கத்தினர் அவர்களுக்கு அதிகத் தொடர்பு உள்ள பகுதி என்று தெரியும். அந்தப் பகுதியில் அவருக்கு நிலம் இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகையால் அவர் சொல்கிறது ஏதாவது அளவுக்கு உண்மையில்லாவிட்டாலும் அவற்றைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மலைச் சரிவுகளில் மேலே மேலே பயிரிடுவதையும் எஞ்சியுள்ள காட்டு வளங்களை அழிக்காமல் பாதுகாக்கவும் மண் அரிப் பாதுகாப்பை கவனிக்கவும் 14—9—1967-ல் ஒரு உத்தரவு போடப்பட்டது. அந்தப் பகுதி முழுவதிலும் 2.400 அடி உயரத்திலே நில விளைவுக் கோடு

24th February 1969]

போடுவதையும் 2,400 அடி நில வளைவுக் கோடுகளுக்கு மேல் உள்ள நிலங்கள் மேலும் ஆக்கிரமிப்புக்கு உட்படாமல் பார்க்கவும், 2,400 அடிக்கு மேல் உயரத்தில் நிலம் வைத்திருப்பவர்கள் செய்ய வேண்டியதென்ன என்று அவற்றைக் கணக்கு எடுக்கவும் என்னென்ன நிலம் உள்ளது, பரப்பளவு, பயிரிடப்படும் பயிர் என்ன. என்ற விவரங்களை சேகரித்து அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்புகளையும், காடு வெட்டுப்படுதலையும் தடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. 4,000 அடி உயரத்திற்கு மேலுள்ள காட்டு நிலங்களில் பயிர் செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டது கேரளாவுக்கு யானைகள் செல்வதைத் தடுக்கவும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

Jaundice in Thanjavur

* 30 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state--

(a) whether many persons were affected by jaundice in Thanjavur during May 1968;

(b) whether distribution of unfiltered water to the people caused the incidence of jaundice; and

(c) whether it is a fact that there was no Health Officer for a long time in that Municipality?

தஞ்சை நகரில் மஞ்சள் காமாலை வியாதி

திரு என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 மே மாதத்தில் தஞ்சை நகரில் மஞ்சள் காமாலை வியாதி பலருக்கு ஏற்பட்டதா?

(இ) தண்ணீரை வடிகட்டாமல் பொது மக்களுக்கு வழங்கிய காரணத்தால் காமாலை வியாதி ஏற்பட்டதா?

(உ) நீண்ட நாட்களாக அந்த நகரசபையில் சுகாதார அதிகாரி இல்லாமலிருந்தார் எனக் கூறப்படுவது சரியா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) தஞ்சாவூர் நகராட்சியில் மே திங்களில் மஞ்சள் காமாலை நோய் ஆறு பேருக்கு மட்டுமே கண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

(இ) இல்லை.

(உ) கூற்று அவ்வளவு சரியல்ல. சுகாதார அதிகாரிகளாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள் கிடைக்காத காரணத்தால் 20-3-1967 பிற்பகல் முதல் 1-7-1968 முற்பகல் வரையில் நகராட்சி சுகாதார அதிகாரியின் பதவி காலியாக இருந்தது. 1-7-1968 பிற்பகல் முதல் அந்தப் பதவிக்கு நியமனம் செய்யப் பட்டது.

திரு என். வர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் நீண்ட நாட்களாகவே சுகாதார வேலைகள் சரியாக நடைபெற வில்லை என்பதற்கு ஆதாரமாக நேற்று முன் தினம் கூட